**கவனிக்க.-** *2006.08.25 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1461 - 2006 සැප්තැම්බර් මැයි සිකුරාදා - 2006.09.01**

*1461 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 790 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | - |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | 793 |
| ஏல விற்பனைகள் | 797 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, செத்தெம்பர் 08 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஓகத்து 25 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## இரத்தினபுரி மாவட்டத்தில் கள்ளுத்தவறணை ஏல விற்பனை - 2007

*பின்னவல-கள்ளுத்தவறணை இலக்கம் 2*

*2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.*

*இவை கீழுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் :-*

(i) *1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏலவிற்பனை தொடர்பான நிபந்தனைகளுக்கும் ;*

(ii) *மதுவரிச் சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான விற்பனை உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவும்,*

*2. எல்லா விலைமனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கி மாவட்ட கிளை அலுவலகத்தில் பணம் செலுத்தியதற்காக பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் இணைக்க வேண்டும். பின்னவல இல. 2 கள்ளுத்தவறணைக்காக ரூபா 500 செலுத்த வேண்டும்.*

*3. இலங்கையில் எல்லா பிரதேச செயலகங்களிலும், கொழும்பு மதுபான ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளகூடிய குறிப்பிட்ட படிவத்தில் எழுதப்பட்ட விலைமனு உரையை ஒட்டி முத்திரைக்கு இடப்பக்க மேல் மூலையில் "பின்னவலை இல. 2 கள்ளுத்தவறணைக்கான விலைமனு" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பிட்ட விலைமனு முடிவடையும் முன் இம்புல்பே பிரதேச செயலாளர் என்ற முகவரிக்கு பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனு பெட்டியில் இட வேண்டும்.*

*4. எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்த பெயரிலேயே விலைமனுவை சமர்ப்பிக்க வேண்டும்.*

*5. ஒருவருக்கு ஒரு கள்ளுத் தவறணைக்கு மேலாக விலைமனு கோரப்பட முடியாது. ஒரு கள்ளுத்தவறணைக்காக 5 பேருக்கும் மேலாகவும் விண்ணப்பம் கோரமுடியாது. விலைமனுவில் குறிப்பிட்டுள்ள பணம், இலக்கத்திலும் எழுத்திலும் அறிவிக்க வேண்டும். விலைமனுக்கோரும் எல்லா மனுக்களிலும் அவரின் கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும். எல்லா விலைமனுக்களும் சாட்சியாளர் இருவரால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும். நிபந்தனைகளுக்கு உட்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.*

*6. வெற்றி பெற்ற விலைமனுக்காரர் விலைமனுவை வாங்கியதாகக் கருதப்பட்டு பின் கள்ளுத்தவணை ஏற்கப்படும் பத்திரத்தில் கையொப்பமிட்டு இம்புல்பே பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் பணத்தைப் பிணைப்பணமாகச் செலுத்தப்படவேண்டும்.*

*7. 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் காலம் முடிவடைந்த உடன் விலைமனுப்பெட்டி திறக்கப்படும். எல்லா விலைமனுக்காரரும் இங்கு கூறப்பட்ட நேரத்தில் இம்புல்பே பிரதேச செயலகத்தில் சமுகமளிக்க வேண்டும்.*

*8. எந்தவொரு காரணமுங்காட்டாது எந்தவொரு விலைமனுவையும் அல்லது மனுக்களையும் சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் அதிகாரம் இம்புல்பே பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

*9. குறிப்பிட்ட தினத்தில் இந்த கள்ளுத்தவறணை ஏற்கப்படாவிட்டால் அதன் மீள்விற்பனை 2006.10.10 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு நடைபெறும். அத்துடன் இந்த விலைமனு வர்த்தமான அறிவித்தலின்படி ஏற்றுக்கொள்ளப்படும்.*

*10. 2007 ஆம் ஆண்டிற்காக தற்பொழுது கள்ளுத்தவறணையை நடாத்திக்கொண்டிருக்கும் இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனைக் கூறமுடியாது. விலைமனுக்காரர் குறிப்பிட்ட பிரதேசத்தில் கட்டிடமொன்றை (இடம்) தேடிக்கொள்ளல் அந்தக் கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அலுவலகத்தில் அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக்கொடுக்க உத்தரவுப் பத்திர அதிகாரிக்கு உடன்பாடு இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.*

*டப். என். ஆர். பீ. விஜயபால,*
*பிரதேச செயலாளர்,*
*இம்புல்பே.*

*பிரதேச செயலாளர் அலுவலகம்,*
*இம்புல்பே,*
*2006.08.11*

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயர், இலக்கம் | பிரிவு | அமைந்துள்ள பிரதேசம் | திறந்திருக்கும் நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளும் நேரம், முடியும் நேரம் |
|---|---|---|---|---|
| பின்னவல - கள்ளுத்தவறணை இல. 2, | கடவத்த கோரளை, | பின்னவல நகரய | மு.ப. 11.00 பி.ப. 02.00<br>பி.ப. 05.00 பி.ப. 08.00 | 2006.10.11 மு.ப.10.30 |

9-47

---

**பதுளை பிரதேச செயலாளரின் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2007**

கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையில் 2007, சனவரி 01 ஆந் திகதி முதல் 2007, திசெம்பர் 31 வரையான காலப் பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு 1982, ஒகத்து 20 ஆந் திகதியும் 207 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வது பற்றிய விதிகளுக்கும் தற்போதைய நடைமுறையில் உள்ள கலால் விதிகள் அனைத்திற்கும் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கும் அமைவாக 2006.10.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கள்ளுத் தவறணையினை குத்தகைக்கு பெற்றுக்கொள்ள முன்வரும் எவரும் எப்பிரதேச செயலாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடியதான விண்ணப்பப்படிவத்தில் முறையாக தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை இங்கு கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வைப்புப் பணத்தினை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுடனும் கள்ளு விற்பனைக்கான நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட பெறுமதி சான்று பத்திரத்துடனும் பொறியிடப்பட்டதும் மேல் இடது பக்க மூலையில் "பதுளை, இல. 01-கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம்" எனத் தெளிவாக எழுதப்பட்டதுமான கடித உறையிலிட்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை பொறுப்பேற்கும் கடைசி நேரத்திற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் போடுவதன்மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரத்தில் செய்யப்படும் மாற்றங்கள், திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிரில் கேள்விப்பத்திரக்காரர் தமது கையொப்பத்தையிடுவதன் மூலம் அவற்றை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திர முடிவுத் திகதியான 2006.10.18 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு எல்லா கேள்விப்பத்திரதாரர்களும் அந்த அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையுமோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ காரணங்காட்டாது நிராகரிக்கும் தத்துவம் பதுளை பிரதேச செயலாளருக்கு உண்டு.

6. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர் எவர் என்பதனை அறிவித்தவுடன் அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்பதாக அக்கேள்விப்பத்திரதாரர் இரண்டு மாத வாடகைக்கு குறையாததாகத் தீர்மானிக்கப்படும் தொகையினை பிணைப்பணமாக பதுளை பிரதேச செயலாளருக்கு செலுத்தி குத்தகை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு கையொப்பமிடுதல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரம் தொடர்பாக வேறு விபரங்கள் தேவையாயின் அவற்றை பதுளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

8. தகைமையான கேள்விப்பத்திரம் எதுவென்பது என்னால் பிரகடனப்படுத்தப்பட வில்லையாயின் 2006.11.17 ஆந் திகதி காலை 10.30 மணி வரை இக் கேள்விப்பத்திரமானது மீண்டும் கோரப்படலாம்.

எம். ஏ. எச். சில்வா,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பதுளை செயலகம்,
பதுளை.
2006.08.16.

### அட்டவணை

பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணை பற்றிய விபரம்-2006
(2007.01.01 முதல் 2007.12.31 வரை)

| தவறணையின் பெயரும் விலாசமும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய உள்ளூராட்சி பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புத் தொகை | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திரம் கோரும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| பதுளை இல. 01 கள்ளுத் தவறணை | பதுளை | பதுளை மாநகர சபையின் இல. 06 கொண்ட கொட்டுவ எனும் பிரதேசம் அரச காணி | மு.ப. 11.00 பி.ப. 5.00 | பி.ப. 2.00 பி. ப. 8.00 | ரூ. 5000 | 2006.10.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை | தகைமையான கேள்விப் பத்திரம் எதுவும் பிரகடனப் படுத்தப்பட வில்லையாயின் 2006.11.17 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை மீளவும் கோரப்படும். |

9-196

---

### வத்தளை பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை-2007

2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தற்போது அமுலிலிருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் நிபந்தனைகளுக்கமைவாகவும்,
(ii) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கமைய வைப்புப்பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்கத்தில் மேல் மூலையில் தவறணையின் பெயரையும், இலக்கத்தையும் "................... இலக்க ........................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2006.09.25 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் வத்தளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2006.10.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் வத்தளை பிரதேச செயலகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைக்கமைய விற்பனை பெறத் தவறும் தவறணைகள் எதுவுமிருப்பின் இவைகளுக்கான விற்பனை மீண்டும் 2006.10.23 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

7. இது விடயமாக மேலதிக விபரங்களை வத்தளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என். நிமல்கா டயஸ்,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
வத்தளை,
2006.08.16

**அட்டவணை**

| இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திரவைப்பு பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வத்தளை | திம்பிரிகஸ்யாய | | 7,260 |
| 2. | வத்தளை | உஸ்வெடகய்யாவ | 2006.09.26 | 4,840 |
| 3. | வத்தளை | போபிட்டிய | மு.ப. 10.30 | 7,260 |
| 4. | வத்தளை | கஹவத்த | | 6,050 |

9-239

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

**மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகை விற்றல் - 2007**

அரசால் அனுமதிக்கப்பட்ட கீழ் காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2007, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2007, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுரிமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன) -

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள் ;

(ii) மதுபான வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.

2. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப் படிவங்கள் மூலம் கேள்விப் பத்திரங்களை ரூ. 5,000 க்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆதனங்கள் தொடர்பான சான்றிதழுடனும் அனுப்பி வைத்தல் வேண்டும். பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதே போன்று அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆதனங்கள் தொடர்பான "சான்றிதழ் 05" செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆதனச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகை காலத்தில் செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆதனங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றுடன் கேள்விப் பத்திரத்தை முன்னளித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆதனங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடி காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு முன்பதாவது முன்னளித்தல் வேண்டும்:-

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து
(ஆ) கொழும்பு 2, ச்டேப்லற் வீதி மதுவரி அலுவலகத்திலிருந்து
(இ) கொழும்பு மதுவரி சபை அலுவலகத்திலிருந்து
(ஈ) களுத்துறை
(உ) சிலாபம்

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின்மேல் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

"2007 ஆம் ஆண்டிற்காக மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை தவறணைக்கான கேள்விப்பத்திரம்"

2006.09.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பு மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களை பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொரட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு அல்லது கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளைக் கைச்சாத்திட அல்லது குறிக்கப்பட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரின் பெயரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையோ மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு.

**அட்டவணை**

| (ஏ) பிரிவு | (பி) மதுபான தவறணை உள்ளடக்கப் படும் பிரதேசம் | (சி) மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | (டி) மதுபான விற் பனை நிலையம் மூடப்படும் நேரம் | (ஈ) கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை | (எவ்) கேள்விகள் மூடப்படும் நேரம் | (ஜீ) விற்கப் படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| 1. மொரட்டுவை மாநகர சபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொரட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் பிரிவு இல. 09 காலி பாதையின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மொரட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு.ப. 11.00<br>பி.ப. 5.00 | பி.ப. 2.00<br>பி.ப. 8.00 | ரூபா 5,000 | மு.ப. 10.30 | 2006.09.20 |

8. மேலதிக விபரங்களை மொரட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. **கவனிக்க**.-2006.09.20 ஆந் திகதிக்கு வாடகைக்கு விட இயலாத வெளிநாட்டு மதுபான தவறணைகள் 2006.10.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடி குத்தகையில் விற்கப்படும்.

ஏ. டி. தயாரத்ன,
பிரதேச செயலாளர்,
மொரட்டுவை.

பிரதேச செயலகம்,
மொரட்டுவை,
2006, ஓகத்து .

9-46

---

## நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணைகள், வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள் குத்தகை விற்பனை - 2007

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியின் 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 1983 ஆம் வருடத்திலும் அதற்கு பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளு, வெளிநாட்டு குடிவகை தவறணைகள் உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2007 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்குக் கொடுத்தல் இக்காலப்பகுதியில் கள்ளு, வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள் (தானியவகைகளைக் கொண்டு இந்நாட்டில் தயாரிக்கப்படும் குடிவகை உட்பட) தனிநபருக்கான சில்லறை விற்பனை குத்தகைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2006.09.13 ஆந் திகதி அட்டவணையில் குறிப்பிட்ட நேரம்வரையும் கேள்விப்பத்திரம் நுவரெலியா பிரதேச செயலாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. (அ) இத்தீவின் எந்தவொரு பிரதேச செயலாளர் செயலகத்தில் இருந்தும் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்விக்காரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்போது கள்ளுத் தவறணைகளினதும், வெளிநாட்டுக் குடிவகைக் குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கேள்விக்காரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்திற்கொள்ள வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம் கையொப்பமிடும் சாட்சிகளது ஆளடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தை யும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு கேள்விக்காரர்களும் தமது ஆளடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, பெறுமதிச்சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும் தவறணைக்கான இலக்கத்தையும் குறிப்பிட்டு நுவரெலியா பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய கால எல்லைக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவதற்குள் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி கால எல்லை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனைத் தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன் நுவரெலியா பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்டு மூன்று மாத விற்பனைக்கு குறையாத பிணைப்பணமாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப்பணம், நுவரெலியா இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக்கணக்கில் எனது பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாக இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாகவேனும் செலுத்தப்படல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2006.10.12 ஆந் திகதி மு. ப. 10.30 மணியளவில் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகைப்பற்றிய மேலதிக விபரங்கள் நுவரெலியா பிரதேச செயலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

காமினி இலங்கரத்ன,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2006.08.07

**அட்டவணை**

வெளிநாட்டு குடிவகைத் தவறணை

| தவறணையின் பெயர் | தவறணை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதித் திகதி | கேள்விகள் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதி நேரம் | கேள்விகள் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| இல. 01 நுவரெலியா | நுவரெலியா மாநகர சபை இல. 06 பிரிவிற்குள் | 2006.09.13 | மு. ப. 10.30 | ரூ. 4,000 |

9-35

## சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைகள் குத்தகை விற்பனை - 2007

2007 ஆம் வருடம் சனவரி 01 ஆந் திகதி முதல் 2007 ஆம் வருடம் திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணைகளுக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாகவே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இடதுபக்கத்தில் தவறணையின் பெயரையும், இலக்கத்தையும் "................................................ இலக்கம் கொண்ட ..................................................... வெளிநாட்டு மதுபானத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிட்டு 2006.09.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.03.20 ஆந் திகதி 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபான குத்தகை நிபந்தனைகளுக்கமைவாக அமைதல் வேண்டும்.

5. 2006.09.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் சகல கேள்விப்பத்திரதாரர்களும் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கமைய இதுவரை குத்தகை விற்பனை செய்யப்படாமல் ஏதாவது தவறணை இருப்பின் அவை 2006.10.17 ஆந் திகதி மு. ப. 10.30 மீள் விற்பனைக்கு விடப்படும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### அட்டவணை

| இல. | பகுதி | கிராமம் | கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் திகதியும் | மீள் விற்பனை செய்யும் நேரமும் திகதியும் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சிலாபம் | இல. 07, பிடிபன வீதி, சிலாபம் | 2006.09.18 மு.ப. 10.30 | 2006.10.17 மு.ப. 10.30 | மு.ப. 11.00 பி.ப. 05.00 | பி.ப. 02.00 பி.ப.08.00 | 500 |
| 2. | சிலாபம் | இல. 06, பசார் வீதி, சிலாபம் | 2006.09.18 மு.ப. 10.30 | 2006.10.17 மு.ப. 10.30 | மு.ப. 11.00 பி.ப. 05.00 | பி.ப. 02.00 பி.ப.08.00 | 1,500 |

எம். சீ. பர்ணாந்து,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2006, ஓகத்து 15.

9-117

# ஏல விற்பனைகள்

## மக்கள் வங்கி - கெக்கிராவ கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**அனுராதபுரம் (மரதன்கடவ) கெக்கிராவ பாதையில் அனுராதபுரத்திலிருந்து 21 மைல் அளவில் சென்ற உடன் மரதன்கடவல நகரத்தின் பிரதான பாதைக்கு அருகில் இடது பக்கத்தில் அமைந்துள்ள இரண்டு மாடி வர்த்தகக் கட்டிடமும் 8.7பர்ச்சஸ் விசாலமுள்ள காணியும் ஏல விற்பனை**

**ஆதனங்கள் பற்றிய விவரணம்.**- வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில், கலாகம் பலாத்தே நோருவ துலானே மாமினியா கோரளை மரதன்கடவல கிராமத்தில் அமைந்துள்ள வீதியகம இடம என்றழைக்கப்படும் காணி தொடர்பாக உத்தரவுபெற்ற அளவையாளரான டி. வி. பிமலசேன அவர்களால் 1994.12.26 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 966 ஆம் இலக்கங்கொண்ட மூலவரைபு படத்தில் 3 ஆம் லொட் இலக்கத்தைக் கொண்ட 8.7 பர்ச்சஸ் அளவுள்ள காணித்துண்டுடன் அங்கே அமைந்துள்ள இரண்டு மாடி வர்த்தகக் கட்டிடம்.

மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் 2006.09.28 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- மரதன்கடவல நகர மத்தியில் இருந்து பிரதான பாதைக்கு அடுத்து, இடது பக்கத்தில் இரண்டு மாடி வர்த்தகக் கட்டிடத்துடன் அமைந்துள்ள காணியாகும்.

**மேலதிக விபரங்களுக்காக.**- 2006.06.23 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", 2006.06.22 ஆந் திகதிய "தினமின", தினகரன்" பத்திரிகைகளிலும் 2006.07.07 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரத்திலும் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஏலவிற்பனைத் தீர்மான அறிவித்தல்களுக்கு கவனம் செலுத்தவும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனையின் இறுதியின் போது ஒரு சிறந்த கொள்வனவாளர் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஒரு பணத்தொகையைச் செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையில் 10% ;
2. மாகாண அதிகார சபையின் குத்தகைக்காக மாகாண அதிகார சபைக்கு 1 % ;
3. ஏலதாரரின் கொமிஸ் கட்டணமாக விற்பனை விலையில் 2 1/2% ;
4. லிகிதர் அறிவித்தல் கட்டணமாக ரூபா 500 ;
5. விற்பனைச் செலவும், ஏனைய கட்டணங்கள் இருப்பின் அத்தொகையும்.

கொள்வனவு விலையில் மிகுதியாகிய 90% ஆகிய தொகையும் விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி, பிரதேச பிரதான அலுவலகத்தில் பிரதேச முகாமையாளருக்குச் செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கம் : 025-2222593, 025-2223035, 025-2222500. பெக்ஸ் இல. : 025-2235855

B 9 – B 079362

உரிமை ஒப்பனைகளும், ஏனைய அதற்குரிய விபரங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகை 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால், தற்போது செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையில் 10% தொகையை மீண்டும் செலுத்தாமல் விடுவதற்கும் மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யும் உரிமையும் மக்கள் வங்கிக்கு உண்டு.

ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம,
இலங்கையில் முன்னணியில் திகழும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்கள்.
(அரச, தனியார் வங்கியாளர்களுக்காக)
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்கள்.

*பிரதான அலுவலகம் :*

24, டொரிங்டன் பாதை,
கண்டி.
தொலைபேசி இலக்கம் : 081-2224371, 081-2227593
பெக்ஸ் : 081-2224371
ஈமெயில் : sameera@diamond.lanka

*நகர அலுவலகம் :*

55, தர்மபால மாவத்தை,
கொழும்பு.
தொலைபேசி இலக்கம் : 011-2448526, 2441761
பெக்ஸ் : 011-2448526, 2575214

9-115

---

## பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**ஒரு பெறுமதிவாய்ந்த சொத்துக்கான ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், அலுத்குரு கோரளையின் ராகம் பத்துவில் உள்ள புலத்கஹாகொடை கிராமத்தில் நிர்ணயிக்கப்பட்ட எஸ் பி ஜயசேக்கரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989, மாச்சு 16 ஆந் திகதியும் திட்ட இலக்கம் 4176 ஆம் இலக்கம் கொண்ட எனக் குறிப்பிடப்பட்ட பிரித்து மீளஅளந்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லா பிரிவுகளும் அங்குள்ள கட்டிடங்கள், மரங்கள், செடிகொடிகள் மற்றும் யாவும் உட்பட**

**(விஸ்தீரணம் : 0 ஏ. 0றூ. 21.5 பே.)**

**ஆதனத்தை அடையும் வழி.**- கொழும்பிலிருந்து செல்கையின் கந்தானைக்கு செல்லும் கொழும்பு- நீர்கொழும்பு நெடும் பாதையிலிருந்து வலது பக்கமாக கம்பஹா பாதைக்குத் திரும்பி புதுகஹாகொடை மத்திய மகா வித்தியாலயம் நோக்கிச் சென்று மீண்டும் இடதுபுறமாய் தார் போடப்பட்ட பாதையினூடாக 200 மீட்டர் பிரயாணம் செய்தால் இடது பக்கத்தில் காணி காணப்படும்.

*(டோன் லால் ஷாந்தா த சில்வா அவர்களால் இக்காணி பேன் ஏஷியா பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டில் (முன்பு பேன் ஏஷியா வங்கி லிமிட்டெட்) அடகு வைக்கப்பட்டது.)*

கொழும்பு பகிரங்க நொத்தாரிசு என். ஆர். ஹேவாதந்திரி என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2006 பெப்புருவரி 10 ஆந் திகதியும் 915 ஆம் இலக்கமும் கொண்ட பிணை உறுதியின் கீழ் கட்டணம் செலுத்தப்படவில்லை. ஆதலால் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷனால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் நாங்கள் 2006, செத்தெம்பர் 19 ஆந் திகதி செவ்வாய்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வோம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலத்தின் முடிவில் பின்வரும் கட்டணங்களை காசாக அவ்விடத்திலேயே செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி 1% ;
(3) ஏலதாரின் தரகுப் பணமாக கொள்வனவுத் தொகையில் 2 1/2% (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) ரூபா 45,000க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவுகளின் 50% ;
(5) இலிகிதர் மற்றும் கூறுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான அத்தாட்சிப்படுத்துவதற்கான நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

***தீர்மான அறிவித்தல்களுக்கு தயவு செய்து***.- 2006.08.14 ஆந் திகதிய " சிலோன் டெயிலி நியூஸ்", "லக்பிம" "சுடர் ஒளி" புதினப் பத்திரிகைகளையும், 2006.08.18 ஆந் திதகிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

மேலதிக விபரங்களுக்கும், காணி உறுதி மற்றும் ஆவணங்களையும் "கொழும்பு 03, காலி வீதி, 450, பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் முகாமையாளர் - சட்டம்" இடமிருந்து பார்வையிட்டு பெற்றுக்கொள்ளவும். தொலைபேசி இல. 2565573, 2565565.

ஷொக்மன் அன்ட் சமரவிக்கிரம,
இலங்கையின் அரசாங்க மற்றும்
தனியார் துறை வங்கிகளுக்கான,
பிரசித்திபெற்ற முன்னோடி பட்டய ஏலதாரர்களும்
மதிப்பீட்டாளர்களும் .

| நகர அலுவலகம் | தலைமை அலுவலகம் |
|---|---|
| 55ஏ, தர்மபால மாவத்தை, | 24, டொரிங்ரன் வீதி, |
| கொழும்பு 3, | கண்டி. |
| தொலைபேசி : 011-2441761 | தொலைபேசி : 081-2227593 |
| தொலைநகல் : 011-2448526 | தொலைநகல் : 081-2224371 |

மின் அஞ்சல் :
samera@sri.lanka.net

9-140

**வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

கணக்கு இல. : 0007 1000 6164 -திலினி கொன்கிரிட் வர்க்ஸ்-

2006.07.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2006.07.05 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2005.05.26 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய ஐந்து இலட்சத்து பன்னிரண்டாயிரம் ரூபா (ரூ. 5,12,000) ஐ மேலும் 2000, பெப்புருவரி 23 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை இரண்டு இலட்சத்து அறுபத்தேழாயிரம் ரூபா (ரூ. 2,67,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இருபத்திமூன்று சதவீத (23%) வட்டியுடனும், உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை, கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 2006.09.28 ஆந் திகதி பி. ப. 3.30 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், துண்பணை, உடபலாத்த, கலதெரவில் அமைந்த ஒரு பேலை நெல் நடப்படும் பில்லகாவஹேன தற்போது வத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேகர அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990 ஒற்றோபர் 20 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 162/90 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த சகலதுடன். சொல்லப்பட்ட நில அளவை வரைபட இல. 162/90 இன்படி துண்டு 2 இன் எல்லைகளாவன- வடகிழக்கில் : ஓடை ; தென்கிழக்கில் : 1990 நவெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட உப பிரிவாகப் பிரிக்கப்பட்ட அதே நில அளவை வரைபடத்தில் குறிக்கப்பட்ட துண்டு 3ஏ ; தென்மேற்கில் : 1990 நவெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட உப பிரிவாகப் பிரிக்கப்பட்ட அதே நில அளவை வரைபடத்தில் குறிக்கப்பட்ட துண்டு 3ஏ மற்றும் உயர் வீதியிலிருந்து கிராமசபை ரோட் மற்றும் ; வடமேற்கில் : உயர் வீதியிலிருந்து கிராமசபை ரோட் மற்றும் ஓடை என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 162/90 இற்கமைய இந்தக் காணி பதினெட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 18பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் K 272/220 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-242/3

**வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

கணக்கு இல. : 0030 1000 0938 - சீ. ஆர். எஸ்.-

2006.07.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2006.07.05 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2004.06.23 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய ஆறு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து ஐநூற்றிஅறுபத்திமூன்று ரூபா முப்பத்திநான்கு சதத்தை (36,67,563.34) மேலும் 2003, ஒற்றோபர் 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 5,00,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இருபத்தைந்து சதவீத (25%) வட்டியுடனும், உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை, கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 2006.09.28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை ராகம்பத்துவில் ஜா-எல நகரசபை எல்லையினுள் கனுவன என்னுமிடத்தில் அலெக்ஸன்ட்ரா மாவத்தையில் இரண்டாம் ஒழுங்கையில் வரிமதிப்பீடு இல. 22 இல் அமைந்த அலேக்ஸன்ட்ரா எஸ்டேட் என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எல். பெர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்டு 1974, ஒகத்து 26 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 207 இல் குறிப்பிடப்பட்டு துண்டு பி என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் சொல்லப்பட்ட துண்டு பி இன் எல்லைகளாவன- வடக்கில் : கிடங்கு மற்றும் அதே காணியின் மீதித்துண்டு ; கிழக்கில் : நில அளவை வரைபடம் இல. 4216 இல் துண்டு 3 எனக் குறிப்பிடப்பட்ட ஆ. குலதிலகவுக்குச் சொந்தமான அதே காணியின் மீதித்துண்டு ; தெற்கில் : அலெக்ஸன்ட்ரா ரோட் மற்றும் ; மேற்கில் : அதே காணியின் துண்டு ஏ என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 207 இற்கமைய இந்தக் காணி இருபத்தேழு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 27.5பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் H 38/169 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தக் காணியின் அண்மைய மீள் நில அளவையின் விபரங்கள் கீழ்வருமாறு :

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை ராகம்பத்துவில் ஜா-எல நகரசபை எல்லையினுள் கனுவன என்னுமிடத்தில் அலெக்ஸன்ட்ரா மாவத்தையில் இரண்டாம் ஒழுங்கையில் வரிமதிப்பீடு இல. 22 இல் அமைந்த அலெக்ஸன்ட்ரா எஸ்டேட் என அழைக்கப்படும் காணியிலிருந்து (உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எல். பெர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்டு 1974, ஒகத்து 26 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 207 இல் குறிப்பிடப்பட்டு துண்டு பி என அடையாளமிடப்பட்டதுமான காணியின் மீள் நில அளவை) உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டி. எட்வட் அவர்களால் தயாரிக்கப்பட்டு 2001 ஏப்பிறல் 23 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 2533 இல் குறிப்பிடப்பட்டு அடையாளமிடப் பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கில் : ஓடை ; கிழக்கில் : நெல்சன் வில்வாவின் காணி ; தெற்கில் : அலெக்ஸன்ட்ரா ரோட் மற்றும் ; மேற்கில் : நில அளவை வரைபடத்தின் துண்டு ஏ என்பவையாகும். மேற்கூறப்பட்ட இந்தக் காணி இருபத்தேழு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 27.5பே.) விஸ்தீரணமுடையது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-242/4

---

**வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி**

*1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

ஆர். பீ. ஜே. குமாரசிங்க-கணக்கு இல. : 0020 5000 1620

2004.01.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2003.12.27 ஆந் திகதிய "ஐலண்ட்", மற்றும் "திவயின" மற்றும் 2003.12.26 ஆந் திகதிய "தினகரன்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2003.09.25 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய ஆறு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூற்றிமுப்பத்தைந்து ரூபா அறுபத்தாறு சதத்தை (ரூ. 6,58,835.66) மேலும் 2003, யூன் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை இரண்டு இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து எண்ணூற்றிதொண்ணூற்றிமூன்று ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூ. 2,99,893.51) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இருபத்தொரு சதவீத (21%) வட்டியுடனும், மேலும் இரண்டு இலட்சத்து பதினோராயிரத்து நானூற்றிஎண்பத்திநான்கு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 2,11,484.29) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இருபத்திரெண்டு சதவீத (22%) வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை, கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 2006.09.25 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்டி கோரளை பள்ளேபத்துவ இல் எஹலியகொட பிரதேச சபை எல்லையினுள் கெண்டகமுவ இஹலகம இல் அமைந்த "உருலேமுள்ள வத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. வெலகெதர அவர்களால் தயாரிக்கப்பட்டு 1996 பெப்புருவரி 17 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 2264 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன். சொல்லப்பட்ட நில அளவை வரைபட இல. 2264 இன்படி துண்டு 1 இன் எல்லைகளாவன- வடக்கில் : உருலேமுள்ளவத்த மற்றும் தீகால்லவத்த ; கிழக்கில் : உருலேமுல்ல கும்புர மற்றும் உருலேமுல்ல வத்த ; தெற்கில் : மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடம் இல. 2264 இல் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்ட 10 அடி அகலமான வழி மற்றும் உருலேமுள்ளவத்த மற்றும் ; மேற்கில் : உருலேமுள்ளவத்த என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 2264 இற்கமைய இந்தக் காணி ஒரு றூட் முப்பத்திநான்கு தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 34.95பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி அவிஸ்ஸாவளை காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் V 96/231 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலும் கீழ் காணி மேலாலும் ஊடாகவும் வழி உரிமையுடன் :

கெண்டகமுவ இஹலகம இல் அமைந்த "உருலேமுள்ளவத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து நில அளவை வரைபடம் இல. 2264 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மேற்கூறப்பட்ட துண்டு 2 இன் எல்லைகளாவன- வடக்கில் : மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடம் இல. 2264 இல் துண்டு 1 ; கிழக்கில் : உருலேமுள்ளவத்த ; தெற்கில் : கிராமசபை ரோட் மற்றும் ; மேற்கில் : உருலேமுள்ளவத்த என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 2264 இற்கமைய இந்தக் காணி மூன்று தசம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 3.3பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி அவிஸ்ஸாவளை காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் V 96/230 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-242/5

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.**

**அட்டவணை - 2006**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 01.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.08.2006 |
| | | வெள்ளி | 08.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2006 |
| | | வெள்ளி | 15.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.09.2006 |
| | | வெள்ளி | 22.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2006 |
| | | வெள்ளி | 29.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2006 |
| **ஒற்றோபர்** | .. | வியாழன் | 05.10.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.09.2006 |
| | | வெள்ளி | 13.10.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.09.2006 |
| | | வெள்ளி | 20.10.2006 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.10.2006 |
| | | வெள்ளி | 27.10.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.10.2006 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 03.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.10.2006 |
| | | வெள்ளி | 10.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.10.2006 |
| | | வெள்ளி | 17.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.11.2006 |
| | | வெள்ளி | 24.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.11.2006 |

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.